செ.வெ.எண்: 292 நாள்: 5.4.2020

**புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் இராணியார் அரசு மருத்துவமனையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆய்வு.**

---

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் இராணியார் அரசு மருத்துவமனையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (5.4.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் பி.கே.வைரமுத்து, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் பா.ஆறுமுகம் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த ஆய்விற்கு பின் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள், ஆரம்பசுகாதார நிலையங்கள் போன்ற அனைத்திலும் போதுமான மருத்துவர்கள் கொண்டு பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை இராணியார் அரசு மருத்துவமனையில் கொரோனா சிகிச்சைக்கென அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகள் பார்வையிட்டு மருத்துவர்கள், செவிலியர்கள், பாதுகாப்பு உபகரணங்கள்,

சிகிச்சை முறைகள் போன்ற பல்வேறு தகவல்கள் குறித்தும் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் கண்டறியும் ஆய்வகத்திற்காக வரவழைக்கப்பட்ட ஆர்.டி.பி.சி.ஆர் (RT -PCR) கருவியினையும் பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்தும் மருத்துவர்களிடம் கேட்டறியப்பட்டது. மேலும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு பழைய அரசு தலைமை மருத்துவமனை வளாகம் ஆய்வு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து புதுக்கோட்டை நகராட்சியில் பொதுசுகாதாரத்துறையின் சார்பில் நடமாடும் மருத்துவ வாகனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பொதுமக்களுக்கான மருத்துவ பரிசோதனை முகாமையும் பார்வையிடப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது வரை எவருக்கும் கொரோனா பாதிப்பு இல்லை. எனினும் உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியுள்ளபடி பாதுகாப்பு நடவடிக்கையாக தனிமைப்படுத்தப்பட்ட சிகிச்சை பிரிவுகள், பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் காய்ச்சல், இருமல், தும்மல் போன்ற ஏதேனும் அறிகுறிகள் இருந்தால் உடனடியாக அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அல்லது அரசு மருத்துவமனையினை அணுக வேண்டும்.

பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய அனைத்து வசதிகளும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இருமும் போதும், தும்மும் போதும் தவறாமல் கைகுட்டையை உபயோகப்படுத்துவதுடன், அடிக்கடி கைகளை சோப்பு அல்லது கிருமிநாசினி கொண்டு கைகழுவ வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களுக்கு வெளியில் செல்லும் பொழுது முகக்கவசம் அணிந்து செல்வதுடன், கண்டிப்பாக சமூக விலகளை கடைபிடிக்க வேண்டும்.

பொதுமக்கள் அனைவரும் கொரோனா குறித்து தேவையற்ற அச்சத்தை தவிர்ப்பதுடன், உரிய விழிப்புணர்வையும் பெற வேண்டும். மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்கு சுகாதாரத்துறையின்

சார்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மீனாட்சிசுந்தரம், ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் சந்திரசேகரன், பொதுசுகாதார துணை இயக்குநர்கள் அர்ஜுன்குமார், கலைவாணி, நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

-----------------------------------------------------------------------------------------------------

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**